# DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE III ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE, SALEM.

Calendar :
Miscellaneous :
Preliminary Register:
Sessions : SC.No.88/2015

Deposition of Witness for Prosecution PW -6

Name : திரு. சதிஷ்குமார்
Father's Name :
Village :
Taluk :
Calling :
Religion :
Age :

Solemnly affirmed in accordance with the provisions of Evidence OATH Act X 1969 on 4th day of July– 2019.

முதல் விசாரணை:-

நான் தற்போது சேந்தமங்கலம் அண்ணாநகரில் வசிக்கிறேன். கூலி வேலை செய்து வருகிறேன். இறந்த ராமகிருஷ்ணன் எனது பெரியப்பா மகன். அ.சா.1 என் அப்பா. நான் சென்ட்ரிங் வேலை செய்கிறேன். 19-10-2013 அன்று பகல் 12 மணியளவில் நான் வேலை செய்துகொண்டிருந்த போது எனக்கு என் அப்பா போன் செய்து என் பெரியப்பா மகன் ராஜசேகரையும் பெரியப்பாவையும் வெட்டி விட்டதாக தகவல் சொன்னார். அந்த சமயத்தில் என் பெரியம்மாவையும் வெட்டி விட்டதாக தகவல் சொன்னார்கள். நான் உடனே புறப்பட்டு வந்தேன். ஊருக்கு வந்து ஊர்க்காரர்களை அழைத்துக்கொண்டு மாலை 5 மணியளவில் சேலம் அரசு மருத்துவமனைக்கு வந்தேன். அப்போது என் பெரியப்பாவும் பெரியப்பா மகனும் இறந்து விட்டதாக சொல்லி சவக்கிடங்கில் வைத்திருந்தார்கள். வார்டில் என் பெரியம்மா அனுமதிக்கப்பட்டிருந்தார். அவரை பார்க்க அனுமதிக்கவில்லை. என் பெரியப்பாவிற்கு தலையிலும், வலது இடது கழுத்திலும் வெட்டுக்காயங்கள் இருந்தது. என் அண்ணணுக்கு கழுத்தில் குத்துக்காயங்கள் இருந்தது. மேலும் சிறு சிறு காயங்களும் என் அண்ணணின் உடலில் இருந்தது. என் பெரியம்மாவை 10 நாட்கள் கழித்து பார்த்தபோதுஅவருக்கும் தலையில் காயம் இருந்தது. மேற்படி

மூவரையும் யார் வெட்டினார்கள் என்பது குறித்து பெயர் எதுவும் கேள்விப்படவில்லை.இறந்த மேற்படி இருவரின் உடலை போலிசார் பார்வையிட்டு என்னை விசாரித்தார்கள். பிரேத விசாரணையின்போது நான் உடனிருந்தேன். இது குறித்து என் தகப்பனார் போலிசில் புகார் கொடுத்தார்.

குறுக்கு விசாரணை ( எதிரிகளின் தரப்பில்)

போலிசார் என்னை இந்த வழக்கில் 19ம் தேதி விசாரித்தார்கள் அதன்பிறகு விசாரிக்கவில்லை. அவ்வாறு விசாரித்த போது மாலை 5-30 மணியிருக்கும். அந்த சமயத்தில் என் அப்பாவும் மற்ற உறவினர்களும் இருந்தார்கள். போலிசார் விசாரணையின்போது என் அப்பா புகார் கொடுத்ததாக சொல்லவில்லை. என் அப்பா எனக்கு நேரடியாக தகவல் சொல்லவில்லை. போன் வழி தகவல்தான். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் சமயத்தில் என் அப்பாவும் சேந்தமங்கலத்தில்தான் இருந்தார். தகவல் தெரிந்துதான் ஊருக்கு வந்தார். சம்பவம் குறித்து கேள்விப்பட்ட பின்னர் நான் என் பெரியப்பா வீட்டிற்கு சென்று பார்க்கவில்லை. நேரடியாக மருத்துவமனைக்கு சென்றேன். பகல் 12 மணிக்கு தகவல் கிடைத்து மருத்துவமனைக்கு வந்ததாக நான் பொய்யாக சொல்கிறேன் என்றும் அதற்கும்முன்பாகவே தகவல் தெரிந்து நான் சேலத்திற்கு வந்து விட்டதாக சொல்வது சரியல்ல. என் அண்ணன் மனைவியின் பெற்றோர் குடும்பத்தினர் மேற்படி துக்கத்திற்கு வந்தார்களா என்பது எனக்கு தெரியாது.

மறு விசாரணை..இல்லை.

IN THE COURT OF THE SPECIAL DISTRICT JUDGE FOR E.C. ACT CASES , SALEM

CC No.37 /2017

Deposition of PW- 6 solemnly affirmed by Tmt.S.Sivakami Gr-I B.C. of this Court, in accordance with the provisions of Oath Act X of 1873, this the 4th day of July -2019.

| | |
|---|---|
| Name திரு. திருமுருகன் | Calling |
| Father's Name | Religion |
| Village | Age |
| Taluk | |

முதல் விசாரணை..

நான் தற்போது சங்ககிரி காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிகிறேன். கடந்த 3-7-2017 அன்று சேலம் போதை பொருள் தடுப்பு நுண்ணறிவு பிரிவில் தலைமை காவலராக பணிபுரிந்த போது அ.சா.,1 எங்கள் ஆய்வாளராக பணிபுரிந்தார். அந்த சமயத்தில் த.கா.,சிவகுமார், பழனிசாமி, வெங்கடாஜலம் மற்றும் குபேந்திரன் ஆகியோர்கள் என்னுடன் பணிபுரிந்தனர். மேற்படி தேதியன்று நிலைய அலுவலில் இருந்த போது காலை 7 மணிக்கு ஆய்வாளர் வெளியில் ரைடு செல்லவேண்டும் தயாராக இருங்கள் என்று கூறினார் அன்று காலை 7-45 மணிக்கு ஆய்வாளருடன் காவல் வாகனத்தில் சேலம் - கோவை ரோட்டின் சேலம் பட்டர்பிளை மேம்பாலத்திற்கு கீழ் செல்வதற்காக போனபோது இரகசிய தகவலாளியை வழியில் ஏற்றிக்கொண்டு மேற்படி இடத்திற்கு சென்றோம். மேற்படி மேம்பாலத்திற்கு அடியில் சேலம் டவுனுக்குள் வரும் குறுக்கு சாலையில் வண்டியை நிறுத்தி விட்டு கண்காணித்துக்கொண்டிருந்தோம். அப்போது காலை 9 மணியளவில் சேலம்-கோவை ரோட்டில் சுமார் 45 வயது மதிக்கத்தக்க நபர் ஒருவர் டி என் 90- ஏ – 2813 என்ற பதிவெண்கொண்ட ஸ்கூட்டியில் ஒருவர் வந்தார். தகவலாளி அவரை அடையாளம் காட்டிவிட்டு மறைந்து விட்டார். பின்னர் ஆய்வாளர் மேற்படி நபரை நிறுத்தினார். அப்போது அந்த வண்டியின் கால் வைக்கும் பகுதியில் ஒரு வெள்ளை நிற சாக்குமூட்டை இருந்தது. பின்னர் ஆய்வாளர் மேற்படி நபரிடம் தன்னை அறிமுகப்படுத்திக்கொண்டு எங்களையும் அறிமுகப்படுத்தி வைத்து பின்னர் மேற்படி நபரிடம் கஞ்சா இருப்பதாக நம்பத்தகுந்த தகவல் கிடைத்திருப்பதாகவும் அதனால் அவரை சோதனை செய்ய மேற்படி நபர் விரும்பினால் அருகிலுள்ள அரசிதழ் பதிவு பெற்ற அலுவலரையோ அல்லது நீதித்துறை நடுவரையோ அனுமதிக்கலாம் என்று ஆய்வாளர் கூறினார். மேற்கூறிய நபர்தான் ஆஜர் எதிரியாவார். அந்த சமயத்தில் மேற்படி

நபர்கள் தேவையில்லை ஆய்வாளராகிய நீங்களே சோதனை செய்யலாம் என்று சம்மதம் தெரிவித்தார். எதிரி தெரிவித்த சம்மதம் ஆய்வாளரால் எழுத்து மூலமாக பதிவு செய்யப்பட்டது. அதில் பொது நபர் சாட்சிகள் சாட்சிகளாக கையெழுத்து செய்ய முன்வராததால் எங்களுடன் வந்த த.கா. சிவகுமார் மற்றும் பழனிசாமி ஆகியோர் சாட்சிகளாக கையெழுத்து செய்தனர். அதில் ஆய்வாளரும் கையெழுத்து செய்து அதன் நகலை ஆய்வாளர் எதிரிக்கு சார்வு செய்தார். பின்னர் எதிரி வைத்திருந்த சாக்கு மூட்டையை பிரித்துஆய்வாளர் பார்த்த போது இலை,பூ, காய்களுடன்கூடிய உலர்ந்த ஒரு பொருள் இருந்தது., அதனை ஆய்வாளர் எடுத்து நுகர்ந்து பார்த்தபோது அதில் கஞ்சா வாடை வீசியது. பின்னர் நாங்கள் கொண்டு சென்றதராசில் மேற்படி கஞ்சாவை சாக்குடன் எடைபோட்டு பார்த்த போது 22 கிலோ கஞ்சா இருந்தது. அதனை ஆய்வாளர் கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றினார் அப்போது காலை 10-15 மணி முதல் 11-30 மணியிருக்கும். அந்த கைப்பற்றுதல் மகஜரிலும்மேற்படி தலைமைக்காவலர்கள் இருவரும் சாட்சிகளாக கையெழுத்து செய்தனர். ஆய்வாளரும் கையெழுத்து செய்தார். பின்னர் எதிரியை 11-45 மணிக்கு கைதுசெய்தார். அதற்கு முன்பாக கைது நமூனா தயார் செய்து மேற்படி சாட்சிகளிடம் கையெழுத்து பெற்று எதிரிக்கு சார்வு செய்யப்பட்டது. பின்னர் எதிரியிடம் அவர் தாமாக முன் வந்துகொடுத்த ஒப்புதல் வாக்குமுலம் ஆய்வாளரால் பதிவு செய்யப்பட்டது. அதில் மேற்படி சாட்சிகள் இருவரும் கையெழுத்து செய்தனர். அப்போது மணி ஞாபகமில்லை. பின்னர் எதிரி மற்றும் தடய பொருளுடன் நிலையம் திரும்பினோம். பின்னர் டி எஸ் பி அவர்கள் என்னை மறு நாள் விசாரித்தார்கள். எதிரியை

நீதிமன்ற காவலுக்கு எடுத்து சென்றேன்.

**குறுக்கு விசாரணை- (எதிரியின் தரப்பில்) 4.7.2019**

எங்கள் காவல் அலுவலகத்திலிருந்து சேலம் பட்டர்பிளை மேம்பாலம் சுமார் 7 கிமீ.தூரம் நாங்கள் ஏவிஆர் ரவுண்டனா வழியாக மேற்படி இடத்திற்குச் சென்றோம். அது சென்னை பைப்பாஸ் என்பது சரிதான். சேலத்திலிருந்து கிழக்கு நோக்கிச் சென்றால் இடதுபுறமாக கோவை ரோடு மேம்பாலத்திற்காக பிரிகிறது என்றால் சரிதான். கொண்டலாம்பட்டி ரவுண்டனாவிலிருந்து வரும் ரோடு மேற்கு நோக்கி வந்து. மேற்படி மேம்பாலத்தில் சேருகிறது என்பது சரிதான். எதிரி மல்லூரிலிருந்து பட்டர்பிளை மேம்பாலம் வழியாக சங்ககிரி நோக்கிச் செல்வதாக ஆய்வாளருக்கு தகவல் கிடைத்ததாகச் சொன்னாரா என்றால் இல்லை. மேற்படி மேம்பாலத்தின் அடியில் சற்று தள்ளி அன்னதானப்பட்டி புறக்காவல் நிலையம் இருப்பதாகச் சொன்னால் சரிதான். நாங்கள் எங்கள் வாகனத்தை நிறுத்தியதாக சொல்லும் இடத்தில் கரும்பு ஜூஸ் விற்பனை செய்யும்

நிலையம் இருப்பதாகச் சொன்னால் சரிதான். எதிரிகள் நீதிமன்ற காவல் அடைப்பிற்கு என்னையும் சேர்த்து நான்குபேர் போனோம். எதிரிகளுடன் தடயப் பொருளையும் எடுத்துச் சென்றோம். அதனை நீதித்துறை நடுவர் மறுநாள் காலையில் நீதிமன்றத்தில் ஒப்படைக்குமாறு கூறி எங்களிடம் கொடுத்துவிட்டார். நாங்கள் தடுத்து நிறுத்தியதாக கூறப்படும் சமயத்தில் எதிரி என்ன நிற உடை அணிந்திருந்தார் என்று என்னால் சொல்ல முடியாது ஞாபகம் இல்லை. நாங்கள் சம்பவ இடத்திற்குச் சென்றபோது. எந்தவகையான தராசினை எடுத்துச் சென்றோம் என்றால் எலக்ரிக்கல் தராசை எடுத்துச் சென்றோம். அதில் சாக்குமூட்டையுடன் அப்படியே எடை வைத்தோம். என்னால் போலீஸ் விசாரணையில் சொல்லப்பட்டுள்ளவாறு எதிரியிடம் அவரை சோதனை செய்ய அவர் விரும்பினால் நீதித்துறை நடுவரிடம் செல்லாம் என்று சொல்லவில்லை என்றால் சரியல்ல. என்னை டிஎஸ்பி அவர்கள் விசாரித்தபோது எதிரிக்கு சம்மத கடித நகல் வழங்கியதாக சொல்லவில்லை என்றால் சரியல்ல. போலீஸ் விசாரணையில் தனி நபர் சாட்சிகள் முன்வரவில்லை என்ற விவரத்தை சொல்லவில்லை என்பது சரியல்ல. 3/7/2017 அன்று ஆய்வாளருடன் நாங்கள் ரெய்டு எதுவும் செல்லவில்லை என்பது சரியல்ல. மேற்படி தேதியன்று காலை 9 மணியளவில் எதிரியை மேற்படி இடத்தில் தடுத்து நிறுத்தி பிடித்ததாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கு சம்பவத்திற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்பது சரியல்ல.எங்கள் துணை கண்காணிப்பாளர் கேட்டுக்கொண்டதன்பேரில் அவர் கேட்டுக்கொண்டபடி பொய் சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் சம்பவ இடத்திற்குச் சென்றதாகவும். மேற்படி மேம்பாலத்திற்கு கீழே வண்டியை நிறுத்தி அங்கு வந்த எதிரியை பிடித்ததாகவும் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றும் அதுமாதிரியான சம்பவம் நடைபெறவில்லை என்றும். சொல்வது சரியல்ல.